# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 239/2025** |
| Prosecution witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | மீனாட்சி |
| Father's /Husband Name | : | சிவக்குமார் |
| Village | : | சிமிழி |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 36 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 07th day of April 2026. accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது ஊரை சேர்ந்தவர் ஆவார். நான் எங்கள் ஊர் பிரசிடண்ட் ஆன சிவசுப்ரமணியன் என்பவரிடம் 2015 ஆம் ஆண்டு நிலம் ஒன்று வாங்கினேன். அப்போது எனது கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார். எனது கணவர் ஊருக்கு வந்தவுடன் வாங்கிய இடத்தை அளந்து பார்த்தோம் குறைவாக இருந்தது. அது சம்பந்தமாக எனக்கும் சிவசுப்ரமணியன் என்பவர்க்கும் மனஸ்தாபம் இருந்து வந்தது. சிவசுப்ரமணியன் என்பவரிடம் ஆஜர் எதிரி ஓட்டுநராக வேலைப்பார்த்து வந்தார். கடந்த 24.06.2021 ம் தேதி இரவு சுமார் 11.00 மணிக்கு மேல் இருக்கும் நேரம் சரியாக நினைவில்லை, ஆஜர் எதிரி எனது வீட்டு வாசலுக்கு முன்பு மதுபோதையில் சத்தம் போட்டு கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரி என்னைப்பார்த்து குச்சிகாரி தேவடியாள் என்ற அசிங்கமான வார்த்தைகளால் என்னை திட்டினார். அப்போது எனது கணவர் கேட்க சென்றபோது எனது கணவர் சிவக்குமாருக்கும் ஆஜர் எதிரிக்கும் சலசலப்பு ஏற்பட்டது எனது கணவருக்க அதில் காயம் எதுவும் ஏற்படவில்லை. அவர்கள் இருவரையும் நான் தடுக்க சென்றபோது ஆஜர் எதிரி கட்டையால் எனது கணவரை அடித்த போது நான் குறுக்கே வந்த போது எனது தலையில் கட்டைப்பட்டு முன் தலையில் காயம் ஏற்பட்டது. நான் சாக்கடையில் விழுந்துவிட்டேன். அப்போது ஆஜர் எதிரி பிரசிடண்டிடம் பணம் எதுவும் பெற முடியாது முடிந்ததை பார்த்துகொள் என்று மிரட்டிவிட்டு ஓடிவிட்டார். அதன்பிறகு எனது கணவர் என்னை 108

ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு நான் உள்நோயாளியாக சுமார் ஒரு வாரம் சிகிச்சை பெற்றேன். நான் சிகிச்சையிலிருக்கும்போது குடவாசல் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். **என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** பின்னிட்டு குடவாசல் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :-

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.07 11:36:49 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`